செ.வெ.எண் 118 நாள் 29.04.2016

## காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக மையத்தின் செயல்பாடுகளை தேர்தல் பொது பார்வையாளர் ஆய்வு செய்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளும் 6 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள்(IAS) தேர்தல் பொது பார்வையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்தேர்தல் பொது பார்வையாளர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்து, கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று (29.04.2016), காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்த திருப்பெரும்புதூர் மற்றும் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு. லால் தௌமாவ்யா இஆப அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை, பறக்கும் படைக் குழு மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் ஜி.பி.ஆர்.எஸ். அமைப்பு, ஊடக மையம் மற்றும் மாவட்ட அளவிலான ஊடக சான்றளித்தல் மற்றும் கண்காணிப்பு குழுவின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி இரா. கஜலட்சுமி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. க.சௌரிராஜன், ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி. முத்து மீனாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) டாக்டர் பிரியதர்ஷிணி, மாவட்ட தகவலியல் அலுவலர் திரு.ஜெ.சேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி. அங்கயற்கண்ணி, மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் திருமதி. எம்.விஜயகுமாரி ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.




காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் –2016 யை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றிதழ் அளிப்பு மற்றும் ஊடக கண்காணிப்பு மைய செயல்பாட்டினை தேர்தல் பொது பார்வையாளர் திரு. லால் தௌமாவ்யா இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி.இரா.கஜலட்சுமி இ.ஆ.ப, அவர்கள் உள்ளார்.